க. நாகராஜன், பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
அஞ்சுகம் முத்துவேலர் அரசினர் மேல்நிலைப்பள்ளி– திருக்குவளை, நாகை மாவட்டம் – 610 204.
தொடர்புக்கு… 7598868760, 9524302724.
மின்னஞ்சல்: srinithicomputerstvr@gmail.com, nagarajangnsn@gmail.com

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2016
# பத்தாம் வகுப்பு தமிழ் இரண்டாம் தாள் - விடைக்குறிப்புகள்

## பிரிவு – 1 – பகுதி – 1

01. அ. பெண்கள் 02. ஆ. பஃறீது 03. இ. ஏழு 04. காஞ்சி 05. இ. நேர்நிரை

## பகுதி – 2

06. பெயரைக் 07. போ 08. ஏறு தழுவுதல் (அ) நிரை மேய்த்தல் 09. சிறுமை + ஓடை 10. அழகு

## பகுதி – 3

11. கேளா + செவி = கேளாச்செவி (வேறு விடைகளும் உள்ளன)
12. அந்தோ, டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் மறைந்துவிட்டாரே!
13. இன்று பேருந்துகள் ஓடா
14. ஓடினான் (பிற விடைகள் : ஓடினேன், ஓடினாய், ஓடினாள், ஓடியது, ஓடுகின்றான்….)
15. தந்தையை இழந்த குடும்பம் **<u>அடியற்ற மரம் போல</u>** ஆனது (பிற விடைகளும் உள்ளன)
16. தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, செல்பேசி, கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன.
17. வேலன் சுயதொழிலில் அதிக வருவாய் ஈட்டினான்.
18. ஏழைகளுக்குப் பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்றுத் தந்தார்.
19. காகம் கரைந்தது. சேவல் கூவும்.
20. மூவேந்தர் - சேரர், சோழர், பாண்டியர்

## பிரிவு – 2 – பகுதி – 1

21. 'ம்' என்னும் மெய்யெழுத்து தன் அரை மாத்திரை அளவிலிருந்து கால் மாத்திரையாக குறைந்து ஒலித்தல் மகரக்குறுக்கம் எனப்படும். எ.கா. : போலும் -போல்ம் - போன்ம், வரும் + வண்டி = வரும்வண்டி
22. அசைநிலைக்கும், விரைவு, சினம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் முதலிய பொருள்நிலைக்கும், செய்யுளில் இசையை நிறைவு செய்தவதற்கும் இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வருவது அடுக்குத் தொடர் எனப்படும். எ.கா.: அன்றே அன்றே, போ போ, எறி எறி, வருக வருக….
23. விடை எட்டு வகைப்படும். அவை: சுட்டு விடை, மறை விடை, நேர் விடை, ஏவல் விடை, வினா எதிர்வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை
24. வெட்சித் திணை, கரந்தைத் திணை, வஞ்சித் திணை, காஞ்சித் திணை (பிற விடைகளும் உள்ளன)
25. செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகியவற்றை அறியலாம்.
26. வெறுமை + இலை (ஈறு போதல்)
    = வெற் + இலை (உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்)
    = வெற்ற் + இலை (தன்னொற்று இரட்டல்)
    = வெற்றிலை (உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே)
27. அமைந்து = அமை + த் (ந்) + த் + உ
    அமை - பகுதி, த் - சந்தி (அது ந் ஆனது விகாரம்), த் + இறந்த கால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.

## பிரிவு – 3 – பகுதி – 1

28. நேரிசை ஆசிரியப்பா : ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று ஈற்றயலடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நாற்சீராயும் வருவது நேரிசை ஆசிரியப்பா

எடுத்துக்காட்டு: பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டீண் டுலகு புரப்பதுவே

இப்பாடலில் ஈற்றயலடி முச்சீராயும் பிறஅடிகள் நாற்சீராயும் வந்துள்ளன. ஈற்றடி ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிந்துள்ளது.

29. இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி சொல் பின்வருநிலையணி.

செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது, சொல் பின்வருநிலையணி..

இக்குறட்பாவில் துப்பு என்னும் ஒரே சொல் உண்பவர், உணவு, உண்ணும் பொருள் எனப் பல்வேறு பொருள்களில் வந்துள்ளது. எனவே, இது சொல் பின்வருநிலையணி ஆகும். (அல்லது)

**அணி இலக்கணம்:** உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது பிறிது மொழிதல் அணி ஆகும்.

**சான்று:** பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

**விளக்கம்:** இக்குறட்பாவில் மென்மையான மயில் தோகையே ஆயினும், அதனை அளவுக்கு அதிகமாக வண்டியில் ஏற்றினால் வண்டியின் அச்சு முறிந்து விடும் என்பது உவமை.

பகைவர்கள் தனித்தனியே நோக்கும்போது மிக எளியோராயினும் ஒன்று கூடினால், தனிப்பட்ட பகை மன்னன் எவ்வளவு வலிமை உடையவனாயினும் அவனை எளிதில் வென்றுவிடுவர் என்பது, இதனால் பெறப்படும் பொருள். எனவே, இது பிறிதுமொழிதல் அணியாகும்.

30.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒழுக் / கத் / தின் | - | நிரை நேர் நேர் | - | புளிமாங்காய் |
| எய் / துவர் | - | நேர் நிரை | - | கூவிளம் |
| மேன் / மை | - | நேர் நேர் | - | தேமா |
| இழுக் / கத் / தின் | - | நிரை நேர் நேர் | - | புளிமாங்காய் |
| எய் / துவர் | - | நேர் நிரை | - | கூவிளம் |
| எய் / தாப் | - | நேர் நேர் | - | தேமா |
| பழி | - | நிரை | - | மலர் |

## பகுதி – 2

31. குறட்டை ஒலி - முன்னுரை - மு.வ. அவர்கள் கதைகள் மனித வாழ்வைச் சித்தரிப்பன - கதாபத்திரங்கள் - வடபகுதியார் - செல்வந்தர் - குழந்தை இல்லை - அமைதியான வீடு - தென்பகுதியார் - ஏழை - வீட்டில் நாய் - ஐந்து குட்டிகள் - தாய் நாய் காணாமல் போனது - குட்டி நாய் கத்துதல் - ஏழைத்தாய் குட்டிக்கு பாலூட்டுதல் - அன்பே இல்லாத வடபகுதியில் ஏப்பஒலி மாறி, குறட்டை ஒலி வந்து கொண்டிருந்தது.

32. குழந்தைத் தொழிலாளர் சட்டம் - பெற்றோர் தம் வறுமையினாலும் அறியாமையினாலும் குழந்தைகளை வேலைக்கு அனுப்புதல் - முதலாளிகள் அவர்களின் உழைப்பைச் சுரண்டுதல் - தடுப்பதற்கு குழந்தைத் தொழிலாளர் தடைச் சட்டம் கொண்டு வருதல் - அனைத்து குழந்தைகளுக்கும் பள்ளிப் படிப்பு.

மாணாக்கர் வன்கொடுமைச் சட்டம்: கல்லூரிகளில் புதிதாகச் சேரும் மாணவர்களின் கூச்சங்களைப் போக்குவதற்காக மூத்த மாணவர்கள் அவர்களுடன் வேடிக்கையாகப் பேசி விளையாடுதல் - நாளடைவில் இது அடித்தல், உதைத்தல் எனறு வன்செயல்களாக மாறி உயிருக்கு ஊறு விளைவிக்கத் தொடங்கின. ராக்கிங் எனப்படும் இக்கொடுஞ்செயலைத் தடுத்து நிறுத்த மாணாக்கர் வன்கொடுமைத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டு மாணவர்களின் நலன் பேணப்படுகிறது.

33. 1963ஆம் ஆண்டு பூம்புகார் அருகில் உள்ள கீழார்வெளி - கடல் ஆய்வில் கிடைத்த புத்தர் சிலை, தூண்கள் - இத்தடயங்கள் வாயிலாக காவிரிபூம்பட்டினம் - புத்த சமயம் பரவியது உண்மை என அறிய முடிகிறது - கடலாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட படகுத்துறை, புத்தர்பாதம் - சங்க இலக்கியங்கள் - செப்பேடுகள், கட்டடங்கள், காசுகள் - இவற்றால் பழங்கால மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளை அறியலாம்.

## பகுதி – 3

34 அ. கயல்விழி **<u>எழுதுபொருள்</u>** கடைக்குச் சென்று, கடைக்காரரிடம் **<u>வடிவியல் கருவிப் பெட்டி, அளவுகோல், எழுதுகோல், அழிப்பான்</u>** மற்றும் **<u>வரைபடக் குறிப்பேடு</u>** ஆகியவற்றைக் கேட்டு வாங்கினான்.

**ஆ. 71 - எக, 89 - அ௯, 165 - க௬ரு, 134 - க௩௪**

35. அ. சீக்கிரமாக இரவில் தூங்கி, விரைவாக அதிகாலையில் எழுந்து கொள்வது என்பது ஒருவனை நலமுடையவனாக வளமுடையனவாக அறிவுள்ளவனாக வைக்கிறது. தாமதமாக எழுபவரை விட, அதிகாலையில் எழுபவருக்குத் தினசரி வேலைகளில் அதிக காலமும் ஊக்கமும் கிடைக்கிறது. தனக்குள் அவர் சுறுசுறுப்பையும் உற்சாகத்தையும் காண்கிறார். படிப்பதற்கு அதிகாலையே சிறந்தது. மூளை புத்துணர்ச்சியுடன் இருப்பதால் கடினமான பாடம் எளிமையாகும்.

ஆ. 1) பதறிய காரியம் சிதறும்

2) ஆழம் தெரியாமல் காலை விடாதே

3) சிறுதுரும்பும் பல் குத்த உதவும்

4) இக்கரைக்கு அக்கரை பச்சை

## பகுதி – 4

36. பொருத்தமான கதை / கவிதை எழுதியிருந்தால் மதிப்பெண் வழங்கலாம்

## பகுதி – 5

37. திரண்டகருத்து : பிறநாட்டு அறிஞர்களின் நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும். சாகாவரம் பெற்ற புதிய நூல்களை எழுத வேண்டும். நம்முடைய பழங்கதைகளைப் பேசி பயனில்லை. நம்முடைய எழுத்துகள் திறமையானது எனில் அதை வெளிநாட்டவர்கள் வரவேற்க வேண்டும்.

மையக்கருத்து: சிறந்த நூல்களை எழுதுதல். மொழி பெயர்த்துப் பாராட்டுதல்

எதுகை நயம்: பி<u>ற</u>நாட்டு - இ<u>ற</u>வாத - ம<u>றை</u>வாக - தி<u>ற</u>மான

இயைபு நயம்: பெயர்த்தல் **<u>வேண்டும்</u>**

இயற்றல் **<u>வேண்டும்</u>**

செய்தல் **<u>வேண்டும்</u>**

பா நயம் : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அணி நயம்: இயல்புநவிற்சி அணி

தலைப்பு: படைப்பின் அழகு அல்லது வேண்டும் வேண்டும்.

வலிவலம் கிளை நாள் 10.12.2016

இடம்: வலிவலம்

சேமிப்பு கணக்கெண் 0040012345

நிலையான கணக்கெண் ......................................

பெயர் : **தென்றல்**

ரூபாய்.பத்தாயிரம் மட்டும் ரூ. 5,000

காசோலை விவரம்

| காசோலை எண் / நாள் | பெறப்பட்ட வங்கி / கிளை | தொகை ரூ. |
|---|---|---|
| - | - | - |

காசாளர் எழுத்தர் / மேற்பார்வையாளர்

வலிவலம் கிளை நாள் 10.12.2016

இடம்: வலிவலம்

சேமிப்பு கணக்கெண்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 0 | 0 | 4 | 0 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |

நிலையான கணக்கெண்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

பெயர் : **தென்றல்**

ரூபாய். பத்தாயிரம் மட்டும் ரூ. 5,000

| காசோலை எண் / நாள் | பெறப்பட்ட வங்கி / கிளை | தொகை ரூ. |
|---|---|---|
| - | - | - |

பண விவரம்

| தாள் | தொகை |
|---|---|
| 1000 × 4 | 4,000 |
| 500 × 2 | 1,000 |
| 100 × | |
| 50 × | |
| 20 × | |
| 10 × | |
| 5 × | |
| காசுகள் | |
| மொத்தம் | 5,000 |



செலுத்துநர் கையொப்பம்

பகுதி 7:

39. அ. அ. தவறு ஆ. இல்லை

இ. தாய் சொல்லைக் கேட்டு நன்கு படித்து அதிக மதிப்பெண்களைப் பெறுவேன்.

ஆ. அ. பக்கத்து வீட்டில் உள்ளவர்களைத் துணைக்கு அழைப்பாள்

ஆ. எங்கள் வீட்டில் உள்ள அலைபேசி வழியாக தந்தைக்கு தகவல் தெரிவிப்பேன்.

(மாணவரின் விடை சூழலுக்குக்கேற்ப சரியானதாக இருந்தால் மதிப்பெண் வழங்கலாம் - மாற்று விடைகள் உள்ளன)

40. கடிதம் - அனுப்புதல் - பெறுதல் - விளித்தல் - பொருள் - செய்தி - இப்படிக்கு - இடம், தேதி - உறை மேல் முகவரி

ஆ. இடம், தேதி - விளித்தல் - செய்தி - இப்படிக்கு - உறைமேல் முகவரி

41. கட்டுரை - தலைப்பு - முன்னுரை - பொருளுரை - மேற்கோள் - உள் தலைப்புகள் - முடிவுரை

**தொடர்புக்கு...** 7598868760, 9524302724, srinithicomputerstvr@gmail.com, nagarajangnsn@gmail.com